**இப்பாகமுவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இப்பாகமுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இப்பாகமுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட காணிகளில் சபைக்கு கிடைத்திருந்த 8 பொதுக் காணிகள் பங்குகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 04 காணிகளின் பெறுமதி ரூபா 2,246,000 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமை காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படாத காணிப் பகுதிகள் கணக்குகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| (ஆ) சபைக்குச் சொந்தமான 2 காணிகளின் பெறுமதி ரூபா 115,000 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த காணிப் பகுதிகளின் பெறுமதி கணக்கிற்கு உள்ளடக்குவதாக அறியத் தருகின்றேன். | |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 554/5 மற்றும் 1989/04/17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான பத்திரத்தின் 217 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 176 கிணறுகள் அமைந்துள்ள காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 500,000 பெறுமதியான குளவெவஹேன, அமைந்துள்ள காணி இரண்டு முறை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | மதிப்பீடு செய்து எதிர்வரும் ஆண்டில் சீராக்கல் செய்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இரண்டு கட்டிடங்கள் தொடர்பாக செலவிடப்பட்டிருந்த ரூபா 354,909 தொகையொன்று மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (உ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 350,000 பெறுமதியான நீர் பௌசர் ஒன்று கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 315,000 பெறுமதியான வில்லை இரும்பு பௌசர் ரூபா 750,000 என பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 435,000 கூடுதலாகவும் ரூபா 1,752,000 பெறுமதியான உழவு இயந்திரம் ரூபா 1,650,000 என ரூபா 102,000 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டின் போது சீராக்கம் செய்வதாக குறிப்பிடுகின்றேன். | |
| (ஊ) | 33 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவின் மூலம் ரூபா 913,593 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் பொருட் கணிப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்படாமல் புத்தகங்களாக காண்பித்து நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் கணக்குகளை சீராக்குவதாக அறியத் தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| (எ) | சபைக்குச் சொந்தமான இருப்பு கணிப்பீட்டின் போது களஞ்சியங்களில் இருந்த இருப்புடன் ஒப்பிடப்பட்ட ரூபா 1,230,377 குத்தகை அசாதாரண மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய கணக்குகளில் குறைபாடுகள் எதிர்வரும் ஆண்டில் கணக்கு தயாரிக்கப்பட்டு சீராக்குவதாக அறியத் தருகின்றேன். | |
| (ஏ) | பேரேட்டில் ஆயுர்வேத களஞ்சியக் கணக்கின் மீதி களஞ்சிய பௌதீக மீதியுடன் இணங்காதிருந்ததால் ரூபா 364,725 தொகை சேர்க்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக அறியத் தருகின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய இயந்திர உபகரண அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,180,696 ஆன மீதி ரூபா 611,712 என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் கடன்கொடுத்தோர் ரூபா 568,984 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டதை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஒ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்குகளில் நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஓ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய நிதியேற்பாட்டு தொகையினை விட கூடுதலாக கிடைத்திருந்த ரூபா 24,739,018 ஆன முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் வருமானத்திற்கு நடவடிக்கை எடுக்காமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் போது கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 25,497,023 ஆன நிதியேற்பாடு பெறுமதியான 30 நிர்மாணங்கள் செயற்படுத்தாமல் இருக்கும் போது அந்நிர்மாணங்கள் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்குகின்றேன். | |
| (க) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 81,268,593 ஆக இருந்த போதும் அது ரூபா 60,000,000 என ரூபா 21,268,593 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்குகின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கா) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,507,581 ஆக இருந்த போதும் அதில் ரூபா 4,123,395 என ரூபா 384,186 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்கம் செய்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,232,056 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,845,561 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் 4,128 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 6,960,585 ஆன வீதவரியும் அறவிடப்படாதிருந்ததுடன் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரைவில் நிலுவைத் தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | 15 மாதங்கள் முதல் 70 மாதங்கள் வரையான காலப்பகுதிக்காக மெல்சிறிபுர 8 கடைகளிலிருந்து ரூபா 986,100 கடை வாடகை அறவிடப்படாமல் இருந்ததுடன் சபையினால் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மிகவும் தோல்வியான செயற்திட்டமாகும். அதற்கு காரணம் மெல்சிறிபுர பஸ் நிறுத்துமிடத்தில் இக்கடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் நுகர்வோர் இக்கடைகளுக்கு வருகை தரவில்லை. | கேள்வி கோரி குத்தகை வழங்கினால் குத்தகைத் தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | மெல்சிறிபுர பஸ் நிறுத்துமிடத்தில் கடைகள் முற்கொடுப்பனவு முறையின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 9 ஆண்டுகள் கழிந்திருந்த போதிலும் ரூபா 936,516 ஆன முற்கொடுப்பனவுத் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,155,711 ஆன நிலுவையில் 1,219,195 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | ஒரே தடவையில் கொடுப்பனவு செய்யும் தொகையை அறவிட்டு கடைகளை வாடகைக்கு வழங்க வேண்டும். அவ்வாறு |

| | | |
|---|---|---|
| தொகை கணக்காய்வுத் தினமான 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | செலுத்தாவிட்டால் கடைகளை சபைக்கு பெற்றுக் கொண்டு மீண்டும் கேள்வி கோரப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 வெளிப்படையான மோசடிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1999 ஆம் ஆண்டில் 27 ஏக்கருடன் கூடிய வாகொல்லவத்த காணியில் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியின் அளவு 368.6 பேர்ச் ஆகும். இக்காணி 30 பேர்ச் அளவு முன்னாள் அரசியல் அதிகாரியால் 2010 ஆம் ஆண்டு முதல் குடும்பமொன்றை அத்துமீறி குடியிருத்தினார். தொண்டுகள் திட்டமிடப்பட்டிருக்கும் போது ஒரே இடத்தில் பொது நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட 15 காணித்துண்டுகள் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அக்காணிப் பங்கு பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் சட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1999 ஆம் ஆண்டின் போது மாத்திரம் காணி ஏலவிற்பனை செய்வது தொடர்பான கோவைகளை ஆராய்ந்த போது பிரதேச சபைக்குச் சொந்தமான காணிப் பங்கு இனங்காண்பதற்கும் அவற்றை பௌதீக ரீதியாக பாதுகாப்பதற்கும் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படுவதாக உறுதிப்படுத்தல் காணப்படவில்லை. அக்காணிப் பங்கு பாதுகாப்பு வேலி மேவுகை இல்லாமையால் காலம் செல்லும் போது பொதுக் காணிப் பங்காக காணப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவது சிக்கலாக இருந்தது. | சபைக்கு கையளிக்கப்பட்ட பொதுக் காணி பாதுகாத்தல் அவற்றை பொது நடவடிக்கை களுக்காக வழங்குதல் சபையின் பொறுப்பாகும். |
| (ஆ) | நாபடே ஹேனேகெதர முக்கலான ஏலவிற்பனைக் காணியில் பொது நடவடிக்கைகளுக்காக 88 ஆம் இலக்க லொட் 2 றூட் 5 பேர்ச் உம் 83 ஆம் லொட் 1 றூட் 38.9 பேர்ச் உம் கிடைக்கப் பெற்றிருந்தது. இக்காணி | 5 ஏக்கருக்கு மேற்பட்ட காணித் துண்டுகளாக்கி விற்கும் போது உள்ளூராட்சி செயற்பாட்டு குழுவின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதன் | 1952 இன் 6 ஆம் இலக்க உப விதி 9(2) பந்தியின் பிரகாரம் துண்டுகளாக்கப் பட்ட காணியின் பொது நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஏலவிற்பனையால் ஒதுக்கப்பட்டிருந்த 83 ஆம் இலக்க காணிப் பகுதி சகதியுடான இடமாக இருப்பதால் 88 ஆம் இலக்க பாதியில் அதியுயர் மின் வயர்கள் செல்வதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இருக்கையில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இக்காணிப் பங்கு பொது நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பிரகாரம் ஏலவிற்பனைக் காணிக்காக 2022 மார்ச் 08 ஆந் திகத நிபந்தனைகள்உள்ளடக்கப் பட்டு மாகாண செயற்பாட்டு குழுவின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் காணிப் பகுதியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) நாபடே ஹேனேகெதர முக்கலான காணி ஏல விற்பனையில் ஒரு சதவீதமான வருமானத்தை பெற்றுக்கொள்ளும் உள்ளவாறான விற்பனைப் பெறுமதி கிடைக்காதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. ஏலவிற்பனை முகவர் நிறுவனத்தில் காணப்பட்ட கோவைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் தம்புள்ள குருணாகல் வீதிக்கு அண்மையில் உள்ள காணிப் பங்கு ரூபா 275,000 இற்கும் வீதிக்கு மறுபக்கத்தில் அமைந்துள்ள காணிப் பங்கு ரூபா 205,000, ரூபா 180,000 இற்கு இடைப்பட்டிருந்ததுடன் விற்பனை செய்யப்பட்டிருக்கையில் விலை காட்சிப்படுத்தப்பட்டிருக் கையில் 1 சதவீத விற்பனை அடிப்படையான வரி வருமானம் ரூபா 1,165,112 குறைத்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | ஏலவிற்பனைக் காணிகளில் 1 சதவீத வரி அறவிடும் போது வெவ்வேறு சிக்கல்கள் காணப்படுவதாக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். ஆதலால் இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளிக்கள பரிசோதனையின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நூற்றுக்கு 1 வரி தொகை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | சபையினால் ஏல விற்பனை செய்யப்பட்ட காணிகளில் 1 சதவீதத்தை பெற்றுக் கொள்ளும் போது உள்ளவாறான விற்பனை பெறுமதி அடிப்படையில் வருமானம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் சப்ரிகம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கும்புக்வெவ முதல் கிப்பவெவ வரை வயல் நடுவில் வீதி ரூபா 876,642 தொகைக்கு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிர்மாண வேலை 2021 ஆகஸ்ட் 04 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது வீதியின் முடிவு மற்றும் கொங்கிறீட் கலவை பலவினமான நிலையில் காணப்பட்டது. வீதியின் தடிப்பு 150 மில்லி மீற்றராக இருக்க | இவ்வீதி உடன்படிக்கை செய்யப்பட்ட சங்கம் கொங்கிறீட் வீதிக்கு மீண்டும் கொங்கிறீட் உறுதியொன்றை இடுவதற்கு இணங்கியுள்ளதாகவும் நிறுத்தி வைத்தல் தொகை கொடுப்பனவு செய்யப்படவில்லை எனவும் அறியத் தருகின்றேன். | இவ்வீதி பொறியியலாளர் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர் வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

வேண்டிய போதிலும் பரீட்சிக்கப்பட்ட மூன்று இடங்களில் வீதி நடுப்பகுதியின் தடிப்பு 111, 130, 144 மில்லிமீற்றராக இருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சேதனப் பசளை தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,807,732 நிதியேற்பாடு கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அச்செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு சபை தவறியிருந்தது. ரூபா 2,810,261 மீண்டெழும் செலவினமொன்று நாளாந்தம் 12 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு உக்காத கழிவுகளிலிருந்து சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படா திருந்ததுடன் திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவ நிலையத்தின் வளவில் குழிகளில் இடப்பட்டிருந்தது. இதற்காக 15 ஊழியர்களும் 3 உழவு இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு பிளாஸ்டிக், காப்போட், பொலித்தீன் திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்த கழிவுப்பொருள் தொகுதியில் களஞ்சியப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முறையான மற்றும் கழிவுப்பொருள் முகாமையொன்று தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் 2022 முழுமையான திண்மக் கழிவு பொருள் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | உக்கும் மற்றும் உக்காத கழிவுகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |